சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS** 05/2009

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08-ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 08.08.2024

Dw1 (பூபதி)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்துக்களை பொறுத்து அவ எண் 22/2011, 40/2011,45/2011,44/2012 ஆகிய வழக்குகள் அனைத்தும் நிலுவையில் இல்லை என்றும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரி, அந்த வழக்குகளுக்கும் இந்த வாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரி. ஜெயக்கொடி என்பவர் வாதி பெயரில் அவ எண் 73/2014 என்ற வழக்கை தொடர்ந்துள்ள விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அ வ எண் 73/2014 தள்ளுபடியாகிவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அ வ எண் 73/2014 பிராது எனது தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம், ஆனால் அது தள்ளுபடியாகிவிட்டதா என்று எனக்கு தெரியாது. மேற்படி அ வ எண் 73/2014 வழக்கு 22.01.2016 ம் தேதி தள்ளுபடியாகிவிட்டது என்றும் அதன் decree தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. நான் வாதி மோசடியாக ஜெயக் கொடியிடமிருந்து கிரயம் பெற்றதுபோல் சித்தரித்து பிசாஆ 1 பிராது நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றும், ஆனால் வாதி அவ்வாறு மோசடி செய்யவில்லை என்றும் மேறப்டி அவ 73/2014 முழு விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் அதன் தீர்ப்பு நகல் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் ஆமாம்,அதில் வழக்கு தள்ளுபடியாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது **வாசாஆ 4.** நில அபகரிப்பு பிரிவில் வாதியின் அக்கா மகன் சுரேஷ் மீது ஜெயக்கொடி என்பவர் நில அபகரிப்பு புகார் மனு கொடுத்ததாக பிசாஆ 2 தாக்கல் செய்துள்ளேன், அந்த புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் தெரியாது. வாதி பெயரில் எந்த

இல்லை என்று அந்த புகார் தள்ளுபடியாகிவிட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. ஜெயக்கொடியிடமிருந்து வாதி பெற்ற கிரயம் மேசாடியானதல்ல அது உண்மையானது என்று நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் ஜெயக்கொடியை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. பிசாஆ 4 பொது அதிகார பத்திரம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாதி சுப்பிரமணியம் நிறைய வழக்கு தொடர்ந்துள்ளார் என்பதை நிருபிக்கும் பொருட்டு அவற்றை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதிலும் வாதி மோசடி செய்துள்ளார் என்று நிருபணம் செய்யப்படவில்லை என்றால் நீதிமன்றதில் அந்த வழக்குகளில் என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. பிசாஆ 1 முதல் 16 வரையான ஆவண்ஙகள் எதுவும் வாதி மோசடி செய்தார் என்று காண்பிக்கக் கூடியவை அல்ல என்றால் சரியல்ல. 22 ஆவணங்கள் தாக்ல்ல செய்ய அனுமதி கோரி இந்த வழக்கில் தாக்கல் செய்த ஐ.ஏ எண் 231/2017 தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஆமாம். அந்த உத்திரவின் பேரில் நான் தாக்கல் செய்த சீராய்வு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரி. அதன் உத்தரவு தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரி. அது **வாசாஆ 5.** அந்த உத்தரவில் நான் எதிர்வாதத்தில் வாதி மோசடி செய்பவர் என்று வாதத்தை சொல்லாததால் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்தது சரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. வாசாஆ 1 ஒப்பந்தம் மற்றும் வாசாஆ 3 கால நீட்டிப்பு பத்திரம் ஆகியற்றை வாதி என்ன காரணத்திற்காக மோசடியாக தயாரித்தார் என்று எதிர்வாதத்தில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, சாட்சி மீண்டும் யோசித்து விட்டு என்னை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக தயாரித்துள்ளார் என்று கூறினார். வாசாஆ 1 மற்றும் வாசாஆ 3 ஆவணங்களை பார்க்காமலேயே அதிலுள்ள கையொப்பம் என்னுடையதல்ல என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் அவ்வாறு நான் கையொப்பமே செய்யவில்லை, அதனால் எனக்கு தெரியும். வாசாஆ 1 மற்றும் வாசாஆ 3ல் உள்ள பூபதி என்ற கையொப்பம் ஒன்றுடன் ஒன்று வேறுபாடு இல்லை என்றால் வேறுபாடு உள்ளது. என்னென்ன வேறுபாடுகள் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் முடியாது. தாவா சொத்து ஒரு கோடி ரூபாய் மதிப்புடையது என்பதை காண்பிக்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்

ஆமாம். வாசாஆ 1 கிரய ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றும், அது



உண்மையானது என்றும் சொன்னால் சரியல்ல. அந்த ஒப்பந்தப்படி ஒப்பந்த தேதியில் நான் ரூ.55,000/- அட்வான்ஸ் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு 04.01.1999 ம் தேதி நான் கேட்டுக் கொண்டதன் பேரில் கால நீட்டிப்பு ஒப்பந்தம் எழுதி 6 மாத காலம் நீட்டிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 1 மற்றும் வாசாஆ 3 ஐ நான் எழுதி கொடுத்து விட்டு தற்போது முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதலில் தாக்கல் செய்துள்ள எதிர்வாதத்தில் கிரய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளேன் என்றும் பின்னர் அதை திருத்தம் செய்து மறுப்பதாக மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி எதிர்வாதம் தாக்கல் செய்தபோதும், வாசாஆ 1 ஒப்பந்தத்தை முதலில் ஒப்புக் கொண்டார் என்றும், தற்போது அதை மறைத்து முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியை ஏமாற்றும் நோக்கில் வாசாஆ 1 மற்றும் வாசாஆ 3 ஆவணங்களை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தை கிரயம் பெறும் அளவிற்கு வசதியுள்ளது என்றும், அதை நான் வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வேண்டுமென்றே என் சகோதரியையும் வேறு நபர்களையும் தூண்டிவிட்டு வேறு வழக்குகளை போட்டு வாதி தாக்கல் செய்த வழக்கை இழுத்தடித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்வாதத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானது என்றும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 08.08.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS